பொதுச் சுற்றறிக்கை இல: 02-124/2009-(1) எனது இல : FHB/SH/Gen/2015

சுகாதார, போஷணை மற்றும் சுதேச வைத்திய
அமைச்சின் செயலாளரின் அலுவலகம்,
385, வணக்கத்திற்குரிய பத்தேகம விமலவன்ச தேரோ
மாவத்தை,
கொழும்பு 10.
02/05/2016.

அனைத்து மாகாண சுகாதார செயலாளர்கள்,
அனைத்து மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள்,
அனைத்து பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள்,
அனைத்து விசேட பிரச்சாரப் பிரிவுகளினதும் நிகழ்ச்சித் திட்டங்களினதும் பணிப்பாளர்கள்,
தேசிய சுகாதார விஞ்ஞான நிறுவனத்தின் பணிப்பாளர்,
அனைத்து போதன வைத்தியசாலைகளின் பணிப்பாளர்கள்
அனைத்து மாகாண பொது வைத்தியசாலைகளின் பணிப்பாளர்கள்
அனைத்து வைத்தியசாலைகளின் வைத்திய அத்தியட்சகர்கள்
அனைத்து விசேட வைத்திய நிபுணர்கள்
அனைத்து வைத்திய அதிகாரிகளுக்கு பொறுப்பான வைத்திய அதிகாரிகள்
அனைத்து தாய், சேய் நல சுகாதார வைத்திய அதிகாரிகள்,
அனைத்து வைத்தியசாலைகளினதும் பணிப்பாளர்கள/வைத்திய அத்தியட்சகர்கள் / மாவட்ட வைத்திய அதிகாரிகள் / பொறுப்பான வைத்திய அதிகாரிகள்,
அனைத்து மாநகர சபைகளினதும் தலைமை சுகாதார வைத்திய அதிகாரிகள்,
அனைத்து சுகாதார வைத்திய அதிகாரிகள்,
அனைத்து பாடசாலை வைத்திய அதிகாரிகள்,

## பாடசாலை மாணவர்களுக்கான மருத்துவ பரிசோதனையும் மருத்துவமனைகளுக்கான பரிந்துரைகளும்.

16.12.2009ம் திகதி இடப்பட்ட இலக்கம் 02-124/2009 சுூட்டறிக்கையானது மேற்குறிப்பிடப்பட்ட விடயம் தொடர்பாக வெளியிடப்பட்டது.

அனைத்து மருத்துவமனைகளும் தமது வைத்திய அதிகாரிகளை (MO,RMO/AMO) மருத்துவ பரிசோதனைகளில் (SMI) பங்கேற்பதற்கு அனுமதி அளிக்கப்பட வேண்டும். இவ்வேற்பாடானது மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி (RDHS) மருத்துவமனை அதிகாரிகள் ஆகியோர் மருத்துவ அதிகாரி – தாய் சேய் சுகாதாரம் (MO-MCH) மற்றும் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி (MOH) ஆகியோரின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

சிகிச்சை அளிக்கப்பட முடியுமான குறைபாடுகளுக்கு உரிய சிகிச்சைகள் மாணவர்களுக்கு பாடசாலை சுகாதார மருத்துவ பரிசோதனையின் போதே வழங்கபடல் வேண்டும்.

மேலதிக சிகிச்சைகள் தேவைப்படுவோர் அருகிலுள்ள விசேட வைத்திய அதிகாரிகள் மருத்துவ நிலையங்களுக்கு செல்லல்.

இருதய நோய்கள் சம்பந்தமான குணங்குறிகள் இருப்பதாக உறுதிப்படுத்தப்பட்ட அல்லது சந்தேகிக்கப்படுகின்ற குழந்தைகள் விசேட சிகிச்சைகளுக்காக பரிந்துரை செய்யப்படுவர்.

நடத்தை பிறழ்வுகள் காணப்படுகின்ற பாடசாலை மாணவர்கள் மனநோய்கள் சம்பந்தமான விசேட வைத்திய நிபுணர் அல்லது வைத்திய அதிகாரி – மன நல சுகாதாரம் (MO-MH) யிற்கு பரிந்துரை செய்யப்படுவர்.

BMI>2SD யிற்கு மேற்பட்ட அல்லது கடுமையான குருதிச் சோகை இருப்பதாக சந்தேகிக்கப்படுகின்ற குழந்தைகள் விசேட மருத்துவ சேவைக்காக பரிந்துரை செய்யப்படல் வேண்டும்.

காது மூக்கு தொண்டை அல்லது கண் சம்பந்தமான பிரச்சனைகள் உள்ள குழந்தைகள் அவ்வவ் சாயன நிலையங்களுக்கு பரிந்துரை செய்யப்படுவர்.

சுகாதார மருத்துவ அதிகாரி தமது பிரதேசத்தில் உள்ள வைத்திய சாலைகளில் இயக்கும் விசேட சாயன நிலையங்கள் நடைபெறும் திகதிகள் உள்ளடக்கிய நாட்காகாட்டி ஒன்றை பராமரித்து வருதல் வேண்டும்.

அனைத்து மருத்துவமனை அதிகாரிகளும் இத்தகைய விசேட சாயன நிலையங்கள் சனிக்கிழமைகளில் காலை வேளைகளிலும் கிழமை நாட்களில் பிற்பகல் வேளைகளிலும் பாடசாலை மாணவர்களுக்காக நடாத்தப்படல் வேண்டும்.

பாடசாலை சுகாதார பரிந்துரை அட்டை (H-606) உடன் ஏனைய நாட்களில் வரும் மாணவர்கள் வெளிநோயாளர் பிரிவில் (OPD) அல்லது வரிசையில் நிற்பதை தவிர்த்து நேரடியாக குறிப்பிட்ட சாயன நிலையங்களுக்கு அனுப்பும் படியான ஏற்படுகளை செய்திருத்தல் வேண்டும்.

H-606 அட்டையானது சிகிச்சையின் பின் நிரப்பப்பட்டு பெற்றோர்/மாணவர்களிடம் ஒப்படைக்கப்படுகின்றதா என்பதையும் கவனத்திற்கொள்ளல் வேண்டும்.

மேலும் பாடசாலை அதிகாரிகள் தேக ஆரோக்கியத்தை ஏற்படுத்துகின்ற விளையாட்டுக்கள் சம்பந்தமான தகவல்களை வழங்க வேண்டும். அத்துடன் அத்தகைய பரிசோதனைகளுக்காக வரும் மாணவர்களை அருகிலுள்ள விளையாட்டு மருத்துவத்துறை அலகிற்கு செல்லுமாறும் பரிந்துரை செய்ய வேண்டும்.

இந்த கூட்டறிக்கையிலுள்ள விடயங்கள் அனைத்து சாயன நிலையங்கள் மற்றும் வெளி நோயாளர் பிரிவு உத்தியோகத்தர்களினதும் கவனத்திற்கு கொண்டுவருமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

நன்றி.

**Dr. P. G. Mahipala**
**Director General of Health Services**
Ministry of Health, Nutrition & Indigenous Medicine
"Suwasiripaya"
385, Ven. Baddegama Wimalawansa Thero Mw:
Colombo 10.

---------------------------------------------

பி.ஜி. மகிபால
சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம்,
சுகாதார அமைச்சு